அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

# 2023/2024

# தமிழ்

## ஆண்டு 7

| | |
|---|---|
| **நேரம்: 150 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்:** 100<br>(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| **நாள்: சனிக்கிழமை** | **பக்கங்கள்:** 14 |

**பெயர்:**

**தமிழ்ப்பள்ளி:**

## பகுதி 1 - எழுதுதல்

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

**1 2 3 4**

1. ஈழத்தில் கூத்துகள் ஆடப்படும் இடங்களுள் ஒன்று
   1. காலி
   2. சிகிரியா
   3. யாழ்ப்பாணம்
   4. அநுராதபுரம்

2. படிக்கிறான் என்பது
   1. இறந்தகால வினைமுற்று
   2. நிகழ்கால வினைமுற்று
   3. எதிர்கால வினைமுற்று
   4. வினையெச்சம்

3. புலவர்கள் கவிச்சுவை சொட்டச்சொட்ட பாடல்கள் பாடினர். இதில் சொட்டச்சொட்ட என்பது
   1. இணைமொழி
   2. இரட்டைக்கிளவி
   3. அடுக்குத்தொடர்
   4. அடுக்கிடுக்குத்தொடர்

4. காடும் காடு சார்ந்த நிலமும்
   1. முல்லை
   2. குறிஞ்சி
   3. மருதம்
   4. நெய்தல்

5. வெம்மை + நீர் என்பதைச் சேர்த்தெழுதினால்
   1. வெம்மைநீர்
   2. வென்நீர்
   3. வெம்நீர்
   4. வெந்நீர்

6. காகம் கரையும். அது போலக் குயில்
   1. அகவும்
   2. கத்தும்
   3. கூவும்
   4. கீச்சிடும்

1 2 3 4

7. இன்று போய் நாளை வா. இச்சொல்லியம்
   1. கூற்றுச்சொல்லியம்
   2. வினாச்சொல்லியம்
   3. ஏவற்சொல்லியம்
   4. மெய்ப்பாட்டுச் சொல்லியம்

8. 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்ற பாரதியின் கனவை நனவாக்கியவர்
   1. மகாகவி து. உருத்திரமூர்த்தி
   2. தனிநாயகம் அடிகளார்
   3. விபுலாநந்த அடிகள்
   4. பாரதிதாசன்

9. இன்பம் என்பதன் ஒத்தபொருட்சொல்
   1. அழகு
   2. அன்பு
   3. மகிழ்ச்சி
   4. கொடை

10. வன்னி நிலப்பரப்பின் கிழக்கு எல்லை
    1. யாழ்ப்பாணம்
    2. திருகோணமலை
    3. அநுராதபுரம்
    4. வவுனியா

11. நாம் எமது பண்பாட்டு அடையாளங்களை... என்பது
    1. சொற்றொடர்
    2. சொல்லியம்
    3. சொல்
    4. வினைச்சொல்

12. ஆதியில் ஈழத்தமிழரது தலைநகரமாகவும் வணிகநகரமாகவும் விளங்கியது
    1. மட்டக்களப்பு
    2. வவுனியா
    3. மன்னார்
    4. பூநகரி

13. பதினெட்டு என்பதைப் பிரித்தெழுதினால்
    1. பதின் + எட்டு
    2. பத்து + எட்டு
    3. பதி + எட்டு
    4. பத்தின் + எட்டு

1 2 3 4

14. திருக்குறள் திருவள்ளுவரால் எழுதப்பட்டது. இதில் வந்துள்ள வேற்றுமை உருபு
    1. ஆல்
    2. ஆன்
    3. இல்
    4. கு

15. காலை என்பதன் எதிர்ப்பொருட் சொல்
    1. இரவு
    2. பகல்
    3. மாலை
    4. வெளிச்சம்

16. போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருக்கும் அடிபணியாது ஆட்சிசெய்த மன்னன்
    1. எல்லாளன்
    2. கயிலாயவன்னியன்
    3. பண்டாரவன்னியன்
    4. சங்கிலியன்

17. பறவைகள் என்பது
    1. அஃறிணை ஒன்றன்பால்
    2. உயர்திணை பலர்பால்
    3. அஃறிணை பலவின்பால்
    4. உயர்திணை ஆண்பால்

18. சிறுவர்கள் பனியில் சறுக்கி விளையாடினார்கள். இதில் சறுக்கி என்பது
    1. பெயரெச்சம்
    2. வினைச்சொல்
    3. பெயர்ச்சொல்
    4. வினையெச்சம்

19. முற்காலத்தில் ஏடுகளில் எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டது
    1. கரிக்கோல்
    2. எழுதுகோல்
    3. எழுத்தாணி
    4. வெண்கட்டி

20. முதலெழுத்துகளின் எண்ணிக்கை
    1. பன்னிரண்டு
    2. முப்பது
    3. பதினெட்டு
    4. ஒன்று

1 2 3 4

21. இந்தியப் படையினரின் அடக்குமுறைகளுக்கு எதிராக அறவழிப் போராட்டத்தை மேற்கொண்டவர்
    1. இசைப்பிரியா
    2. மாலதி
    3. அங்கயற்கண்ணி
    4. அன்னை பூபதி

22. நாளை பள்ளிக்குப் போவோம். இதில் வந்துள்ள தோன்றா எழுவாய்
    1. நான்
    2. அவர்கள்
    3. நாங்கள்
    4. நீங்கள்

23. பழந்தமிழரின் மரபுவழி நாட்டார் கலைகளுள் ஒன்று
    1. கூத்து
    2. விளையாட்டு
    3. சிற்பம்
    4. ஓவியம்

24. தமிழ் இளையோர் தம் அடையாளத்தைப் பேண வேண்டும். இதில் வந்துள்ள செயப்படுபொருள்
    1. இளையோர்
    2. வேண்டும்
    3. அடையாளத்தை
    4. தமிழ்

25. கருத்தின் அடிப்படையில் சொல்லிய வகைகள்
    1. இரண்டு
    5. நான்கு
    6. ஆறு
    7. எட்டு

(25 X 1 = 25 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள சொற்கள் பெயராகவும் வினையாகவும் அமையச் சொல்லியம் எழுதுக.**

1. **கரை**

பெயர்: ____________________

வினை: ____________________

2. **தை**

பெயர்: ____________________

வினை: ____________________

(6 புள்ளிகள்)

**3. தரப்பட்டுள்ள சொல்லியங்களை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

**தமிழ்:**

1. என்னிடம் பல நூல்கள் உள்ளன.
2. நிலா எல்லோருடனும் அன்பாகப் பழகுவாள்.
3. மாணவர்கள் ஆசிரியரை மதித்து நடக்க வேண்டும்.
4. கணியன் தனது பெற்றோருடன் தமிழில் உரையாடுவான்.
5. கோடை காலத்தில் மரங்களில் வண்ணப் பூக்கள் அழகாக இருக்கும்.

**வாழிடமொழி:**

1. ____________________
2. ____________________
3. ____________________
4. ____________________
5. ____________________

(5×2=10 புள்ளிகள்)

**4. தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. வடமோடிக் கூத்துகள் எவற்றைக் கருப்பொருளாகக் கொண்டவை?

2. தமிழரது உணவின் சிறப்புத் தன்மைகள் யாவை?

3. வன்னியின் வரலாற்றில் கலந்துள்ளவை எவை?

4. பண்டைத் தமிழர் நிலங்களை எவற்றின் பெயரால் அழைத்தனர்?

5. இரண்டாம் வேற்றுமை உருபு ஏற்ற சொல்லியம் ஒன்று எழுதுக.

6. கலைகள் மனத்திற்கு மகிழ்ச்சியைத் தருவன. இது எவ்வகைச் சொல்லியம்?

7. எழுவாய், செயப்படுபொருள், பயனிலை ஆகியவை அமையுமாறு சொல்லியம் ஒன்று எழுதுக.

(5 X 2 = 10 புள்ளிகள்)

**5. தரப்பட்டுள்ள வினையடிகளின் பெயரெச்சம், வினையெச்சம், வினைமுற்று என்பவற்றை எழுதுக.**

| | பெயரெச்சம் | வினையெச்சம் | வினைமுற்று |
|---|---|---|---|
| பாடு | | | |
| உண் | | | |
| எழுது | | | |

(9 X 1 = 9 புள்ளிகள்)

**6. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

புதிதில் கசப்பாய் இருந்தாலும்
போகப் போகத் தித்திக்கும்
எதிலும் சிறந்த கல்விதனை
என்றும் தேடிச் சேர்த்திடுவாய்

வெல்லம் போன்று இனிக்குமது
விரும்பும் சுகத்தை அளிக்குமது
கல்விச் செல்வம் தரும்சுவையே
கடைசி வரைக்கும் துணையாகும்
ஆசை யோடு கற்றிடுவாய்
அறிவு தன்னைப் பெற்றிடுவாய்
தேச மெல்லாம் பயனடையும்
சிறந்த தொழிலைத் தேர்ந்திடுவாய்

- கவிஞர் சபா. அருள் சுப்பிரமணியம்

1. போகப் போகத் தித்திப்பது எது?

_______________________________________________

2. அது எதைப் போன்று இனிக்கும்?

_______________________________________________

3. கவிதையை எழுதியவர் யார்?

_______________________________________________

4. அறிவைப் பெறுவதற்கு என்ன செய்ய வேண்டும்?

_______________________________________________

5. தேசம் எல்லாம் பயனடைய எதைத் தேர்ந்தெடுக்க வேண்டும்?

_______________________________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**7. தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. வன்னி
2. தமிழர் பண்பாட்டு அடையாளங்கள்
3. எனது பொழுதுபோக்கு

**உள்ளடக்கக் குறிப்புகள்:**

- பொதுவான பொழுதுபோக்குகள்
- விரும்பும் பொழுதுபோக்கு
- விரும்புவதற்கான கரணியங்கள்

4. சுற்றுலா

**உள்ளடக்கக் குறிப்புகள்:**

- சென்ற இடம்
- பார்த்த விடயங்கள்
- பெற்ற பயன்

(15 புள்ளிகள்)

## பகுதி 2

## வாசித்தலும் விளங்கிக் கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

குளிர் நாடுகளில் மார்கழி மாதம் தொடக்கம் பங்குனி மாதம் வரை கடும்பனி காலமாக இருக்கும். அதனால், பெரும்பாலும் மரங்கள் யாவும் இலைகளை உதிர்த்து வெறுமையாகக் காட்சியளிக்கும். இதனை மரங்களின் உறங்குநிலை என்பர். இவ்வாறு பனி காலத்தில் சில விலங்குகளும் பறவைகளும் பாதுகாப்பான இடங்களைத் தெரிந்தெடுத்து அந்தந்த இடங்களில் உறங்குநிலைக்குச் செல்கின்றன. அவை சிறிய குகைகளிலும் மரங்களிலும் நிலத்தில் குழி தோண்டியும் அவற்றினுள் பனி காலத்தைக் கழிக்கின்றன. பனி காலத்தில் குளங்கள், குட்டைகள் உறைந்து விடுவதால் பறவைகள் இடம் மாறிச் செல்கின்றன. இவை வடக்கே இருந்து காற்று வீசும் சரியான நேரம் பார்த்து ஈட்டிமுனை வடிவில் பறந்து செல்வதை நாம் பார்க்கலாம். அனைத்து உயிரினங்களும் கோடை காலம் தொடங்கியவுடன் தத்தம் இடங்களுக்குத் திரும்பிச் செல்கின்றன.

1. குளிர் நாடுகளில் கடும் பனி காலம் எப்பொழுது தொடங்குகிறது?

______________________________________________

2. மரங்கள் இலைகளை உதிர்த்து வெறுமையாகக் காட்சியளிப்பதை எவ்வாறு அழைப்பர்?

______________________________________________

3. பறவைகளும் விலங்குகளும் பனி காலத்தைக் கழிக்கும் இடங்கள் இரண்டு எழுதுக.

______________________________________________

4. எக்காலத்தில் அனைத்து உயிரினங்களும் தத்தமது இடங்களுக்குத் திரும்புகின்றன?

______________________________________________

5. பனி காலத்தில் பறவைகள் ஏன் இடம்மாறிச் செல்கின்றன?

______________________________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**2. அறிவித்தலை வாசித்து, தரப்பட்ட கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் ✗ எனவும் அடையாளமிடுக.**

**வாணி தமிழ்ப்பள்ளி நடத்தும் தமிழர் வரலாற்றுக் கண்காட்சி - 2024**

அன்புடையீர்!

இளந்தலைமுறையினர் எமது உண்மை வரலாற்றை அறியும் நோக்குடன் உயிரோட்டமான மாபெரும் வரலாற்றுக் கண்காட்சி நடைபெறவுள்ளது

**வரலாற்றுக் கண்காட்சியில் உள்ளடங்குபவை:**

- தமிழர் வாழ்வியல்
- பண்பாட்டுக் கூறுகள்
- தமிழர் வரலாற்றுச் சான்றுகள்

**இடம்:** முத்தமிழ்க் கலையரங்கம்
**காலம்:** 11.02.2024 ஞாயிற்றுக்கிழமை 09:30 மணி
**தொடர்புகளுக்கு:** 302 701 47 15
**ஒழுங்கமைப்பு:** வாணி தமிழ்ப்பள்ளி

உண்மை வரலாற்றை அறிவோம்! வரலாறு படைப்போம்!

1. தமிழ்ப்பள்ளியில் பொன்விழா நடைபெறவுள்ளது. ( )
2. இக்கண்காட்சி முத்தமிழ்க் கலையரங்கில் நடைபெறும். ( )
3. வரலாற்றுக் கண்காட்சி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. ( )
4. வாணி தமிழ்ப்பள்ளியால் கண்காட்சி ஒழுங்கமைப்புச் செய்யப்பட்டுள்ளது. ( )
5. பண்பாட்டுக் கூறுகள் கண்காட்சியில் இடம்பெறும். ( )

(5 X 1 = 5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 25 | | | |
| 2 | 06 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 09 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக் கொள்ளுதலும் | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |